**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**OS.No. 207/2008**
**நாள்.07.11.2025**
**பி.வா.சா.2- ஜெயராமன்**
**த/பெ - கிருஷ்ணசாமி**
**<u>வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு வரவில்லை என்றால் சரிதான்.

2. செல்வராஜ் வகையறா என்னை சாட்சியம் அளிப்பதற்கு அழைத்து வந்தார்கள்.

3. செல்வராஜ் வகையறா எத்தனை நபர்கள் என்றால் ராஜமோகனும், ராகுல் பாபாவும் ஆவார்கள்.

4. ராஜமோகனும், ராகுல் பாபாவும் தந்தை மகன் என்றால் சரிதான். ராஜமோகனும், ராகுல் பாபாவும் மிகப்பெரிய செல்வந்தர்கள் என்றால் சரிதான். அவர்கள் அரசியல் வாதிகளும் என்றால் சரிதான்.

5. நான் வடமதுரைக்கு குடியேறி சுமார் 30 வருடங்கள் இருக்கும்

6. 30 வருடங்களுக்கு முன்பு தென்னம்பட்டி கிராமம், அழகர்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் கிருஷ்ணசாமி. எனது தகப்பனாருக்கு 2 மனைவிகள் என்றால் சரியல்ல. எனக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி ராணி, 2 வது மனைவி சுசிலாதேவி என்றால் சரிதான்.

7. எனது 2 வது மனைவியின் தாயார் பெயர் விஜயலட்சுமி. விஜயலட்சுமியும், பாலகிருஷ்ணனின் முதல் மனைவியான ஜெயலட்சுமியும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். எனது அண்ணன் பெயர் ராமசாமி.

8. வழக்கை யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் செல்வராஜ் மீது சுப்பையா வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

9. சுப்பையா செல்வராஜ் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பணத்தை கொடுக்கவேண்டும் அல்லது சொத்தை கொடுக்கவேண்டும் என்று பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

10. செல்வராஜ் மற்றும் சுப்பையா ஆகியோரின் பெற்றோர் பெயர் தெரியாது என்றால் சரிதான். செல்வராஜ் மற்றும் சுப்பையா ஆகியோரின் தகப்பனார் பெயர் பாலகிருஷ்ணன் என்றால் சரியல்ல.

11. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் கூறினேன் என்றால் சரிதான்.

12. நிரூபணவாக்குமூலத்தில் பாலகிருஷ்ணன் குடும்பத்தை பற்றி தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

13. பாலகிருஷ்ணனுக்கு மொத்தம் 4 மகன்கள் மற்றும் 3 பெண்கள் ஆவர். பாலகிருஷ்ணனுக்கு எத்தனை மனைவிகள் என்றால் ஒரு மனைவி தான்.

14. பாலகிருஷ்ணனுக்கு 2 மனைவிகள் ஜெயலட்சுமி மற்றும் ரங்கநாயகி என்றால் சரியல்ல.

15. 2002ம் வருடம் பாலகிருஷ்ணன் நாயுடு எழுதிவைத்த பாகவிஸ்தி பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் நாயுடு ஆசிரியராக தென்னம்பபட்டி, ஆண்டியபட்டி, வடமதுரை மற்றும் பல ஊர்களில் வேலை பார்த்தார் என்றால் சரிதான்.

16. நான் அழகர்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வந்தபோது பால்வியாபாரம் செய்து வந்தோம் என்றால் சரிதான்.

17. நான் அழகர்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வந்தபோது தென்னம்பட்டியில் ஆசிரியராக பணியாற்றிய பாலகிருஷ்ணன் வீட்டிற்கு நானும், எனது அண்ணனும் பால் ஊற்றி வந்தோம் என்றால் சரியல்ல.

18. 2008ம் வருடம் பாலகிருஷ்ணன் நாயுடுவின் மக்கள் SRR கம்பெனிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

19. 2012ம் வருடம் அழகர்சாமி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்திலும் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றாலும், அதை படித்து பார்க்கவில்லை என்றாலும் சரிதான்.

20. 2014ம் வருடம் அழகர்சாமியிடமிருந்து செல்வராஜ் வகையறா கிரையம் பெற்ற கிரைய ஆவணத்திலும் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றாலும், அதை படித்து பார்க்கவில்லை என்றாலும் சரிதான்.

21. எனக்கு எழுத படிக்க தெரியும். வாதிகளான சுப்பையா, மாலா, செல்வி ஆகியோர் எந்த எந்த சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

22. பாலகிருஷ்ணனின் 2வது மனைவி ரங்கநாயகிக்கு சுப்பையா, செந்தமிழ்செல்வி, மாலா ஆகியோர் வாரிசுதாரர்கள் என்றால் சரியல்ல.

23. தாவா சொத்துக்களுக்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் செல்வராஜ் வகையறா பெயரில் உள்ளது. மேற்படி பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

24. தாவா சொத்துக்களுக்கு செல்வராஜ் வகையறா பெயரில் பட்டா இல்லை என்றாலும், வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

25. தாவா சொத்துக்களையும், பாலகிருஷ்ண நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்களையும் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட பாகவிஸ்தி பத்திரம் மற்றும் கிரைய பத்திரம் ஆகியவைற்றை பற்றியும் பாலகிருஷ்ணன் நாயுடுவின் வாரிசுகள் பற்றியும் எனக்கு எந்த விவரங்களும் தெரியாது என்றாலும், வழக்கிற்காக பாலகிருஷ்ணன் நாயுடு பற்றி நன்றாக தெரியும் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**